**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மதியழகன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சண்முகசுந்தரம் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on20.08.2025.

முதல் விசாரணை

1. நான் சின்னவீரன்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனது அப்பாவும் விவசாயம் செய்து வந்தார். எனது அப்பா குறிப்பாக பால் சொசைட்டியில பால் ஊற்றி வருவது வழக்கம். கடந்த 19.06.2022 ம் தேதி இரவு 8.00 மணியளவில் எனது அப்பா பால் ஊற்றிவிட்டு TVS XL SUPER இரு சக்கர வானத்தில் உடுமலை – பல்லடம் ரோட்டில் காளியம்மன் கோயில் அருகில் ரேட்டின் மேற்புறம் இருந்து கிழப்புறமாக பைக்கை தள்ளி கொண்டு வந்தார். நான் மற்றும நண்பர் பாலாஜியும் அப்பொழுது அந்த பகுதிக்கு எதிர் புறத்தில் உள்ள பேக்கரியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.
2. நானும் எனது நண்பர் பாலாஜியும் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். எனது தந்தை கிராஸ் செய்த போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த வெள்ளையன் என்பவர் எக்ஸெல் ஹெவி டியூட்டி வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எனது தந்தை வாகனத்தின் மீது

மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

3. நான் அதை பார்த்த உடன் அதை பார்த்ததும் எனது நண்பருடன் அங்கு சென்று பார்த்த பொழுது எனது அப்பாவிற்கு தலையிலும் இடது காலிலும் அடிபட்டிருந்தது. உடனடியாக ஆம்புலன்ஸ் வரவழைத்து வேல் மருத்துவமனைக்கு முதல் உதவி சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு பரிசோதித்து விட்டு மேல் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் ஜிஹெச்க்கு அனுப்பி வைத்தார்கள்.
4. நாங்கள் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்பந்தமாக 20 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் விபத்தின் காரணமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். என்னிடம் காட்டப்படும் புகாரியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.
5. எனது தந்தை 20 ம் தேதி இரவு சிகிச்சை பலனின்றி இல்லாமல் இரவு 9 மணிக்கு இறந்து விட்டார். இறந்த தகவல் கேட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு போலிசார் வந்து பிரேத விசாரணை நடத்தி பரிசோதனைக்கு பின் உடலை கொடுத்தனர். எங்கள் வழக்கப்படி நல்லடக்கம் செய்தோம். மேற்படி TVS XL Heavy Duty வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். போலீசார் என விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாஜி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | குமாரசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on20.08.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் சின்னவீரன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். pioneer woncorn காற்றாடி கம்பெனியில் எலக்டிரிக்கல் என்ஜீயரிங்காக வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது நண்பர் ஆவார். கடந்த 19.06.2022 ம் தேதி நானும் எனது நண்பர் மதியழகனும் சின்ன வீரன்பட்டியில் சின்ன வீரம்பட்டி ஐயப்பா பேக்கரி கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்போது மதியழகன் அப்பா மேபுரத்திலிருந்து கிளப்புறமாக வண்டியை தள்ளி கொண்டு வந்து கிராஸ் செய்தார். என் அப்பாவின் வண்டி எண் TN78 Z 3145 xl Super ஆகும்.
2. அப்பொழுது வடக்கிலிருந்து தெற்காக எக்ஸெல் ஹெவி ட்யூட்டி வாகனம் வேகமாக வந்து மதியழகன் அப்பாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார். நாங்கள் ஓடிச் சென்று பார்த்த பொழுது அவருக்கு பின் தலையில் பின் தலையிலும் இடது காலிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. பக்கத்தில் உள்ளவர்கள் உதவியுடன் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக வேல் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். சிடி ஸ்கேன் பார்த்துவிட்டு மேல் சிகிச்சைக்காக கோவை

அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். நாங்கள் அங்கு சென்றோம். ஜிஹெச்க்கு சென்ற மறுநாள் இருபதாம் தேதி அவரது சிகிச்சை பலனின்றி தந்தை இறந்து விட்ட தகவல் கேட்டு நான் கோவை ஜிஹெச்க்கு சென்றேன்.

3. அங்கு போலீசார் அங்கு வந்து பிரேத விசாரணை நடத்தி பரிசோதனைக்கு பின்னர் உடலை கொடுத்தனர். நண்பரின் வழக்கப்படி அடக்கம் செய்தோம். Heavy Duty வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயரை பின்னர் கேட்டு தெரிந்து கொண்டோம். அவரது பெயர் வெள்ளையன் என்று தெரிந்து கொண்டேன். அவரை அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரி தான்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 271/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமாரசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முத்துகவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on20.08.2025.

முதல் விசாரணை

1. நான் சின்னவீரன்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வயது 68 ஆகும். அசா.2 எனது மகன் ஆவார். அசா.1 எனது உள்ளூர் காரர் ஆவார். கடந்த 19.06.2022 ம் தேதி சொந்த வேலையாக சின்னவீரன்பட்டி பஸ் ஸ்டாப்பில் காத்து கொணடிருந்தேன். அப்போது சண்முகசுந்தரம் என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வண்டியை தள்ளி கொண்டு வந்தார்.
2. அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த எக்ஸ் எல் வாகனம் வேகமாக வந்து டப் என்றும் மோதியது. நான் அங்கு சென்றேன். அப்போது எதிர்புறமாக பேக்கரியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த எனது மகனும் இறந்து போனவரின் மகனும் ஓடிவந்து அருகில் இருந்தவர்கள் உதவியுடன் அருகில் உள்ள வேல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.
3. அவருக்கு மண்டையிலும் காலிலும் காயம் இருந்ததால் சீரியஸ் கேஸ் என்று சொல்லி கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அடுத்த நாள் மாலை 9 மணிக்கு இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தவர்

உடுமலை முனிர் நகரை சார்ந்த வெள்ளையன் என கூறினார்கள் தெரிந்து கொண்டேன் அவரைப் பார்த்தால் அடையாளம் தெரியும். இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டதால் சரியாக அடையாளம் கூற முடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.